# தமிழ் மருத்துவப் பொழில்

திங்கள் வெளியீடு.

மலர் 1 | ஆகஸ்டு, 1941 | இதழ் 7

## தாய்களையும் குழந்தைகளையும் பேணுதல்.

V

பிள்ளைப்பேறு அல்லது பிரசவம் :—

பிள்ளைப்பேறு காலத்தைச் சற்றேறக் குறையக் குறிப்பிடக் கூடும். கடைசியாகத் தோன்றிய சூதகத்தினின்று ஒன்பது மாதம் கணக்கிட்டு ஏழு நாட்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். உதாரணமாகக் கடைசியாகச் சூதகம் சித்திரை மாதம் பத்தாம் தேதி தோன்றினால் அத்தேதியிலிருந்து ஒன்பது மாதங்கள் கணக்கிடத் தை மாதம் 10 தேதியாகும். 7 நாட்களையும் கூட்ட 17 தேதியாகும். இதுவே பேறு காலம் என நிச்சயிக்கலாம். பேறுகாலத்துக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னிருந்து கர்ப்பிணி வாரத்திற்கு இருமுறை எண்ணெய் முழுக்கு எடுத்து வருவது நன்றாகும்.

பிரசவ அறை, வீட்டிற்கு வடகிழக்கில் அமைக்கப் படுவது நன்று. அது சுத்த முள்ளதாகவும் நல்லவெளிச்சமும் காற்றும் பெற்றதாகவும், ஓதமில்லாததாகவு மிருக்க வேண்டும். அதன் வாசல் கிழக்கு அல்லது தெற்கு முகமாக இருத்தல் வேண்டும். பிரசவத்திற்குத் தேவையான பொருள்களைத் தவிர வேறு எப்பொருளும் அங்கு இருக்கக் கூடாது.

அனுபவமும், தேர்ச்சியு முள்ள மருத்துவச்சியை பிரசவத்தைப் பார்க்க அமைக்கவேண்டும் இன்றேல் துன்பம் உண்டாகும். அவள்

நோய் இல்லாதவளாயும், தூய்மையும், பொறுமையும், தைரியமும் முக மலர்ச்சியும் உடையவளாயும் இருக்கவேண்டும். இவளும், இவளுக்கு உதவிசெய்ய, பல பிள்ளைகளைப் பெற்று அனுபவமடைந்த பெண்களில் ஒருவர் அல்லது இருவர் தவிர மற்றெவரும் அவ்வறைக்குள் போகக் கூடாது. இவர்கள் சுத்தமான வெள்ளை ஆடைகளை அணிந்து சுத்த மாக இருக்க வேண்டும். மருத்துவச்சி பிள்ளைப் பேற்றைக் கவனிக் கும் போது மற்ற இரு பெண்மணிகளும் கர்ப்பிணிக்கு ஊக்கமூட்ட வேண்டும். அவளுக்குத் தேவையானபோது கஞ்சியைக் கொடுக்க வேண்டும். மலமூத்திரங்களை அப்புறப் படுத்தவேண்டும். மற்றும் மருத்துவச்சிக்குப் பல உதவிகளைச் செய்யவேண்டும். பத்து நாளும் அறையிலிருந்து பிரசவித்தத் தாயையும் பிறந்த குழந்தையையும் கவ னித்துக் கொள்ளவேண்டும். அவர்களுக்கு வேண்டியதைச் செய்ய வேண்டும். இப்படி வெகு ஜாக்கிரதையாய்ப் பிள்ளைப் பேற்றைப் பார்க்கவேண்டும். இன்றேல் கர்ப்பிணியாயிருந்தபோது எடுத்துக் கொண்ட முயற்சிகள்யாவும் வீணாகும். கர்ப்பிணிக்கும் பல கஷ்டங் கள் நேரக்கூடும். மேற் கூறியவாறு பிள்ளைப்பேற்றைப் பாாத்துக் கொள்ள வசதியில்லாதவர்களும், இயல்பாக பிரசவம் ஆகாது என்று சந்தேகப்பட்ட கர்ப்பிணிகளும் ஒன்பதாமாத இறுதியிலேயே மருத் துவ சாலைக்குப் போவது நன்று.

பிள்ளைப் பேறடைந்த தாயின் பராமரிப்பு :—

நஞ்சு முதலியன வெளிவந்தபின் தாயைச் சுத்தமாகத் துடைத் துப் பட்டிகட்டி இரண்டு மணி நேரஞ் சென்றபின் அவ்வறையிலேயே ஒரு சுத்தமான கட்டிலில் மல்லாத்திப் படுக்கவைக்கவேண்டும். கட்டில் வாசலுக்கோ, சாளரத்திற்கோ எதிராக இருக்கக் கூடாது. இருப் பின் எதிர்காற்றினுல் சுரம் வரக்கூடும். இதன் பொருட்டுச் சற்றும், காற்று வராதவாறு பலகணி முதலியவைகளை அடைத்தும் விடக் கூடாது ; புழுக்க முண்டாகி பல இன்னல்களை விளைவிக்கும். அக்கட் டில் நடுவில் பள்ளம் இராததாக விருப்பதோடு, தலைப்பக்கம் சற்று உயரமாகவும், கால்பக்கம் சற்று தாழ்ந்துமிருப்பது நன்று.

பிரசவித்த ஆறு மணி நேரத்திற்குள்ளாக நீரும், இருபத்து நான்கு மணி நேரத்திற்குள் மலமும் கழியவேண்டும். நீர் கழியா விட்டால் சிறுநீர் பெருக்கிக் குடிநீர் அல்லது மருந்துகள் அல்லது ஆயுதம் (catheter) இவைகளைக் கொண்டு வெளிப்படுத்தலாம். மலம் கழிய இந்துப்பை உபயோகிக்கலாம். பன்னிரண்டு மணிநேரத் திற்குப் பிறகு குழந்தைக்குப் பாலூட்டும்படிச் செய்யவேண்டும். இப்பாலுக்கு மலமிளக்கிச் செய்கையிருப்பதால் குழந்தையின் காட்டு மலத்தைச் சரியாக வெளிப்படுத்தவுதவும். குழந்தைக்குப் பால் ஊட்டத் தாமதப்பட்டால் பால் கட்டிக்கொண்டு, மார்புகள் விம்மி, வீங்கி, சுரம் முதலியவை, உண்டாகும். தாய்க்குப் பிரசவகளைப்பு நீங்க நித்திரை மிகவும் அவசியமாதலால் அவளை ஒருவித

தொந்தரவுஞ் செய்யாது நித்திரை செய்யவிடவேண்டும். எவரும் * அவ்வறையில் பிரவேசிக்கக் கூடாது. அதேயறையில் குழந்தையைக் குளிப்பாட்டிக் கம்பளித்துணியால் முகத்தை மூடாது, சுற்றி ஒரு தொட்டிலில் வைக்கவேண்டும். தாய் எழும்வரையில் மற்றொருவர் அக்குழந்தையைக் கவனித்துக் கொள்ளவேண்டும்.

பன்னிரண்டு மணி நேரத்திற்குள் கருப்புக் காபியைக் கொடுக்கலாம். அதற்குப் பிறகு முதல் மூன்று நாளும் பால், கஞ்சி, ரொட்டி முதலியவைகளை இருவேளையும் கொடுக்கலாம். கொதித்து ஆறிய நீரையே குடிப்பதற்கும், கழுவுவதற்கும் கையாடவேண்டும். மிகவும் குளிர்ந்த நீரை உபயோகிக்கக்கூடாது. இளம் வெந்நீரே நன்று. மூன்றும் நாள் முதல் பகலிலும், ஐந்தாம் நாளிலிருந்து இரு பொழுதும் அன்னமளிக்கலாம். எண்ணெய், கடுகு, புளி, மிளகாய் இவைகளை அறவே நீக்கவேண்டும். முருங்கை, கத்தரி, அவரை இவைகளின் இளம் பிஞ்சு, கருணை, அரைக்கீரை அன்னப்பொடி இவைகளையே கறிகளாகக் கொள்ளவேண்டும். துவர்ப்பான அத்திப் பிஞ்சு, வாழைப்பிஞ்சு போன்றவைகளை சேர்க்கக்கூடாது. இவைகளினால் கிரமமாக வெளிப்படவேண்டிய அழுக்குத் தடைப்படும். அதிக சூடாக உணவைக் கொள்ளக்கூடாது. காயமருந்துகளையும் உஷ்ணமான பொருள்களையும் அதிகமாகக்கொள்ள கரபாதசந்நி வரும். ஆகையால் அவைகளை அதிகமாகக்கையாடக் கூடாது.

முதல் நாள் மல்லாந்தே படுத்திருக்கவேண்டும். இரண்டாம் நாள் சற்று ஒஞ்சரித்துப்படுக்கலாம், மூன்றும் நாள் தலையணைகளை யடுக்கிச் சற்று சாய்ந்துகொள்ளலாம். ஐந்தாம் நாள் உட்காரலாம். ஏழாம் நாள் சற்று அவ்வரையிலேயே உலாவலாம். இப்படி யிருந்தால்தான் கருப்பையானது தன் இயற்கையிடத்தையும், தன்மையையும் அடையும். அல்லது அது ஒருபுறம் சாய்ந்தோ அல்லது சரிந்தோ இயற்கை நிலையிலிருந்துமாறிப்போம். கருப்பையானது தினம் தினம் ஒவ்வொரு விரற்கடையாகச் சுருங்கிப் பத்துநாட்களில் தன் இடத்தையும் சுபாவத்தையும் அடையவேண்டும். குழந்தைகளுக்குப் பால் ஊட்டுவதினால் கருப்பை கிரமமாகச் சுருங்க ஏதுவாகிறது.

தேவைக்கு அதிகமாகப் பால் சுரக்கின் அதைப் பீச்சி விடவேண்டும். இன்றேல் பால் கட்டிக்கொண்டு முற்கூறியவாறு வீக்கம், சுரம் இவைகள் உண்டாம்.

முதல் பத்து அல்லது பதினைந்து நாட்களும் அழுக்கு வெளிப்படவேண்டும். முதலில் அதிகமாகவும் சிவப்பாகவுமிருக்கும். பிறகு கிரமமாக குறைந்து சிவப்புநிறம் மாறி வெண்மைநிறம் மேலிடும்; துர்நாற்றமிராது கட்டிவைத்திருக்கும் பட்டியை அடிக்கடி மாற்ற

* பிரசவித்தவர்களிருக்கும் அறை தீட்டுப்பட்டதென்று இந்தியர்கள் கருதுவதால் எவரும் போகார்.

வேண்டும். முதல் மூன்று நாட்களும் இரண்டு மூன்று மணி நேரத்திற்கு ஒரு முறை மாற்றுவது நன்று. நடுமூன்று நாட்களும் ஐந்து ஆறு மணிநேரத்திற் கொருமுறையும், இறுதிமூன்று நாட்களும் அதற்குப் பிறகும் எட்டுமணி நேரத்திற் கொருமுறையும் மாற்றவேண்டும். பட்டியானது அசுத்தமடைந்த வுடனே மாற்ற வேண்டும். அழுக்குப்பட்ட பட்டியை அதிகநேரம் கட்டிவைக்கக் கூடாது. அது துர்நாற்றம் வீசின் வியாதி என்று அறியவேண்டும்.

பத்து அல்லது பதினைந்து நாள் கழித்து தாய்க்குக் காய்ச்சிய எண்ணெயைத் தேய்த்து ஸ்நானம் செய்வித்து வீட்டுக்கு அழைத்துக் கொள்ளலாம். ஆனால் அவர்கள் பத்து நாள் வரையில் வீட்டு வேலைகளைச் செய்யக்கூடாது. ஒரு மாதம் வரையில் குளிர்ந்த நீரில் கை வைக்கக்கூடாது. இளம் வெந்நீரையே உபயோகிக்க வேண்டும். குழந்தைக்குப் பால் ஊட்ட வேண்டிய காலம் வரைக்கும் பத்தியமாக உணவைக்கொள்ளவேண்டும். கரப்பான், மாந்தம் இவைகளை உண்டாக்கக்கூடிய பொருள்களை உண்ணக்கூடாது. பாலைச்சுரப்பிக்கக் கூடிய பாதம், பால், சுறுமீன் போன்ற பொருள்களை உபயோகிக்க வேண்டும். குழந்தைகள் பன்னிரண்டு அல்லது பதினெட்டு மாதங்கள் வரையில் தாய்ப்பாலை அருந்துவது நன்று. பத்தியமிருப்பதற்குக் கஷ்டமாக விருப்பதினாலும், தற்கால நாகரீகத்தையனுசரித்தும் சீக்கிரத்தில் இரண்டு மூன்று மாதங்களுக் கெல்லாம் பாலை மறக்கடிக்கிறார்கள். இதனால் குழந்தைகளின் வன்மைகுன்றும்.

---

## கஸ்தூரி

Dr. R. தியாகராஜன், L.I.M.

(39-ம் பக்கத் தொடர்ச்சி)

மேலே சொல்லப்பட்ட நோய்களுக்கு இதனை $\frac{1}{4}$ முதல் 2 குன்றியெடை வரை உபயோகிக்கலாம்.

தமிழ் வைத்தியர்கள் இதனை தனியாக உபயோகப்படுத்துவதோடு மற்றைய சரக்குகளுடன் சேர்த்தும், தைலம், மெழுகு, மாத்திரை, பொடியாகச் செய்தும், நோய்க்குத் தக்கவாறு அனுபானித்தும் தொன்றுதொட்டு உபயோகித்து வருகின்றனர். அவற்றில் சிலவற்றை ஆராய்வாம்.

தனவந்தர்கள் தாம்பூலத்துடன் உடல் தேற்றியாகக் கஸ்தூரியை அருந்துகின்றனர்.

நாட்பட்ட சுரநோயினருக்கு உண்டாகும் உடல் தளர்ச்சியை நீக்கும் பொருட்டு பூரணசந்திரோதயத்தை $\frac{1}{4}$ முதல் $\frac{1}{2}$ குன்றிவரை இதனுடன் சேர்த்துத் தேனி லிழைத்துக் கொடுத்தல் பழக்கம்.

கஸ்தூரியுடன் தாம் பிரசெந்தூரத்தை $\frac{1}{4}$ முதல் $\frac{1}{2}$ அரிசி எடை சேர்த்து உத்தாமணிச் சாற்றிலே அனுபானித்துக் கொடுக்கச் சுவாச காச நோய் நீங்குமென்பதனை கீழ்க்கண்ட மருத்துப் பாரதச் செய்யுளினுலறிக.

" சுவேத வாகனனுன மைந்தனெனு மைந்தனைச்
சொர்க்கமெனு முத்த மாங்கத்
தோன்றலெனு மான்மத வலாரிதன் பகையான
சுவாசமாங் கால கேய
நிவாத கவசத்தவுணர் முப்பத்து மூன்முன
நிகழ் லக்க ரோமாகரை
நிமிடத்திலே கொன்று வேலிச் சரத்தினுல்
நீருக்கியக் காலேயே."

தாய்க்கு ஈன்ற பிறகு நேரிடும் தடைப்பட்ட அழுக்கு படுவதற்கும், சுரம் நீங்குவதற்கும் கஸ்தூரிக் கறுப்பு $\frac{1}{4}$ முதல் $\frac{1}{2}$ குன்றியும் *பட்டுக் கறுப்பு $\frac{1}{4}$ முதல் 1 குன்றியும் சேர்த்துத் தேனிலிழைத்துக் கொடுத்தல் மரபு. கஸ்தூரிக் கறுப்பின் முறையைக் கீழே காண்க.

கஸ்தூரி 1 வ. எடை

| | |
|---|---|
| பச்சைக் கர்ப்பூரம்<br>கோரோஜனை<br>இரசம்<br>பூரம்<br>இரசசெந்தூரம்<br>இலிங்கம்<br>கந்தகம்<br>தாளகம்<br>மனோசிலே<br>ஓமம்<br>குங்குமப்பூ<br>திப்பிலி | தனித்தனி 5 வராகனெடை. கஸ்தூரியைத் தவிர மற்றைய சரக்குகளைத் தனித்தனியாகப் பொடித்து முறைப்படி ஒன்ருகக் கலந்து பிறகு கஸ்தூரியைப் பொடித்து அவைகளுடன் சிறுகச் சிறுகச் சேர்த்து அரைத்துக் கொள்ளவும்.<br>அளவு $\frac{1}{2}$ முதல் $1\frac{1}{2}$ குன்றியளவு. |

தேரன்யமகவெண்பாவில் கூறப்பட்ட கஸ்தூரி மாத்திரையையும் அதனுல் தீரும் பிணிகளையும் கீழ்க்கண்ட செய்யுளினுலும் அதன் பழைய உரையினுலுமறிக.

மாரனேருங் கத்தூரி மாத்திரைமுன் முக்கடுகை
மாரனேருங் கத்தூரி மாலலங்கல்—மார
வருணமுனி யாதவமே மாருதமுன் ஞேநோய்
வருணமுனி யாதவமே மால்.

---

*பட்டுக்கறுப்பு—இதன் முறையைச் சித்த வைத்தியத்திரட்டில் காண்க.

(எ. து.) மாரன் நேருங் கத்தூரி மாத்திரை-மன்மதனையொத்த அழகுவாய்க்கச் செய்யும் கத்தூரி மாத்திரையைச் செய்யும் விதம் எப்படி யெனின், முன்-கஸ்தூரி, முக்கடு-சுக்கு, மிளகு, திப்பிலி, ஐ-கடுகு, மார நேருங்கத்தூரி-மாயும்படி அழுந்த மத்திக்க, மாலலங்கல்-துளசிச்சாறுவிட்டும், மார-மகிழம்பூச்சாறுவிட்டும், வருணம்-தண்ணீர் விட்டான்கிழங்குச்சாறு விட்டும், முனி-அகத்திச் சாறு விட்டு மரைத்து மாத்திரையாக வுருட்டி, ஆதவம்-வெய்யிலிலே யுலர்த்தி, ஏ-இசைவான பிறகு, மாருதமுன்னுநோய்-வாத முதலான நோய்களெல்லாம் போகிறதற்கு, வருணம்-தண்ணீரிலே பொசித்தால், வாதசுரம், வாதநளிர், வாதப் பிடிப்பு முதலான பிணிகளெல்லாம் போமென்றும், முனி-தேனிலே பொசித்தால், பித்தநோய், பித்த சுரம், பித்த வாயவு முதலான பிணிகளெல்லாம் போம் என்றும், ஆதவமே-கொன்றைப் பூச்சாற்றிலே பொசித்தால், சேட்பசுரம், சேட்பசன்னி, தலைவலி, தலைக்குடைச்சல் போமென்றும், மால்-எலுமிச்சம் பழச்சாற்றிலே பொசித்தால் மூலவிப்புருதி, ஆசனருடி மேகருன்மம் போன்ற சகலநோய்களும் நீங்கும் என்றும் கூறப் பட்டிருக்கிறது.

மற்றும், தோட சந்நிபாதம், பித்தசுரம், தலைவலி, வாந்தி, நீர்க் கோவை முதலிய நோய்கள் நீங்க கீழ்க்கண்ட குளிகையை செய்து தாய்ப்பாலி லனுபானித்துக்கொடுக்கவும்.

"எய்தாமல் கஸ்தூரிகழஞ்சு ஒன்று
இதமான குங்குமப்பூ கழஞ்சிரண்டு
எய்தாமல் ரோசனையுங் கழஞ்சு மூன்று
இவை மூன்றுங் கல்வத்தி விட்டுக்கொண்டு
எய்தாமல் அமுர்தமெனு முலைப் பால்விட்டு
இனிதான சாமமொன்ற ரைத்துக்கொண்டு
எய்தாமல் குன்றிபோல் நிழல் உலர்த்தி
எடுத்து நீ செப்புதனில் அடைத்திடாயே"

நிற்க, பாலர்கட்குண்டாம் வலிப்புநோய், சுவாச காசம், மயக்கம், கபவாதம், வயிற்றுநோய், ஆசன அடைப்பு, கட்டி, வாத உன்மாதம் நீங்க, தேரன் தைலவர்க்கத்தில் கூறியுள்ள கஸ்தூரித் தைலத்தை $\frac{1}{2}$, $\frac{1}{4}$, $\frac{1}{8}$ (பலம்) கணக்காக நிறுத்து அனலில் வெதுப்பிக் காலை மாத்திரம் கொடுத்துவர நீங்குமென்றறிக.

கஸ்தூரி வாசனைத் திரவியங்களுள் ஒன்ருகையினுல் தைலங்களுக்கு மணம் ஊட்டுவிக்க மற்றைய வாசனைத் திரவியங்களுடன் உபயோகிக்கப் படுகின்றது. உதாரணமாக சுக்குத் தைலம் சிறு சந்தனுதித் தைலம் முதலியவற்றில் காணலாம்.

மகாராஜ மிருகாங்கம், பூரண சந்திரோதயம் போன்ற பெரு மருந்துகளிலும், காமவிர்த்திச் செய்கையுடைய மாத்திரைகளிலும் கஸ்தூரி சேர்க்கப்படுகின்றது.

ஆங்கில வைத்தியர்கள் கஸ்தூரியுடன் $1\frac{1}{2}$ குன்றியளவு சூடனைச் சேர்த்து இருதயத்தைத் தூண்டுவதற்காக உபயோகிக்கின்றனர். சூடன் கஸ்தூரியின் மணத்தை மாற்றுவதாகவும் கூறுகின்றனர்.

முக வசீகரம் தரும் பொருட்டு இதனை நெற்றியில் பொட்டிட்டுக் கொள்ளுதல் பழக்கம்.

இருமல் வியாதிக்குக் கஸ்தூரி பங்கு-க, குங்குமப்பூ, சாதிக்காய், சாதிப்பத்திரி, இலவங்கம் இவை வகைக்குப் பங்கு-வ, இவைகளைக் கல்வத்திலிட்டுச் சேர்த்தரைத்துத் துளசிச்சாறுவிட்டு நான்கு நாள ரைத்துக் கடலைப் பிரமாணம் மாத்திரைகள் செய்து நாளொன்றுக்கு, 1 முதல் 2 மாத்திரைகள் வீதம் கொடுத்தலுமுண்டு.

---

# சென்னை மாகாண எல். ஐ. எம். விசேஷ மகா நாடு.

## வரவேற்பவைத் தலைவருரையின் சுருக்கம்.

இந்திய மருத்துவ பாடசாலையில், நம்நாட்டு வைத்தியத்திலும் மேனாட்டு வைத்தியத்திலும் முக்கியமாகவும், உபயோகமாகவுமுள்ள வற்றையே எடுத்துக்கொண்டு இந்திய வைத்தியத்தை வளர்க்கவேண்டு மென்பது முக்கிய நோக்கம். ஆனால், Dr. T. S. S. ராஜன் சுகா தார விலாக்கா மந்திரியாக விருந்தபோது மேனாட்டு மருத்துவத்தை எல். ஐ. எம். பிள்ளைகட்கு இப்போது கற்றுக் கொடுக்கும் அளவை விட அதிகமாகக் கற்பிக்க வேண்டுமென்றும் அதைப்பற்றி ஆலோ சிக்க ஒரு கமிட்டி ஏற்படுத்த வேண்டுமென்றும் தீர்மானித்தார். அதற்குள் மந்திரிசபை கலைந்தது. ஆனாலும் கவர்ன்மெண்டார் அவ் வகைச் சபையை ஏற்படுத்தினார்கள். அச்சபையின் முடிவுகளை கவர்ன்மெண்டார் எற்றுக் கொள்ளவில்லை.

அரசியலாரின் தற்கால முக்கியமான எதிர்ப்புகள் கீழ்க் காண் பவைகளேயாம்.

1. ஐந்து ஆண்டுகட்குள் இருவித வைத்தியங்களையும் கற்பிப் பது கடினம்.

2. திரிதோஷத்தைப்பற்றியும், நவீன மேனாட்டு வைத்திய முறைகளைப்பற்றியும் கற்பிப்பது என்பது அவ்வளவு பொருத்தமுடைய தல்லவென்று கர்னல் சோப்ரா கூறியதை உட்கொண்டு கவர்ன்மெண்ட் அறிக்கை நம் பள்ளிக்கூட நடைமுறையை எதிர்த்தது.

3. கடைசியாக அவ்வறிக்கை இப் பள்ளியைப்பற்றி நான்கு ஆலோசனைகள் கூறிற்று.

அவை :—

(a) பழைய முறைப்படி ஆயுர்வேத, சித்த, யூனானி முறைகளைக் கற்பித்தல்.

(b) அம்முறைகளில் குறைபாடிருப்பதை மேனாட்டு வைத்திய வுதவியால் நிரப்புதல்.

(c) மேனாட்டு மருத்துவக் கல்வியில் தேர்ந்தவர்களை இந்திய மருத்துவத்தைக் கற்கும்படிச் செய்தல்.

(d) இப்பள்ளியில் இந்திய மருத்துவத்தைக் கற்பவர்களை மேனாட்டு வைத்தியக் கல்லூரியில் படிக்கச் செய்தலாம்.

ஆகிய இவ்வகைப்பட்ட எதிர்ப்புகட்கு மறுப்பு மகாநாட்டு தலைவர் உரையிலுமுள்ளதால் அதை இங்குக்கூறாது விடுத்தனம்.

பம்பாய் ஆயுர்வேத காலேஜ் ஸ்தாபனத்தைப்பற்றி அம்மாகாண கவர்னரின் அட்வைசர் கூறியதைக் காண்க.

"Declaring the College open, Mr. Knight said: "To-day marks an epoch in the science of Ayurveda in the Province of Bombay, for, in the Rambilas Anandilal Podar College efforts will be made to raise the standard of education in the science of Ayurveda and to supplement that system in those direction in which in the past the Ayurvedic system has appeared deficient, perhaps especially in surgery and gynæcology, and to add to its methods, hallowed by tradition, the scientific advances made more recently in other systems of medicine.''

"Emphasising that this College must aim at conservation in Ayurveda, and the absorption into Ayurveda of all knowledge which can be proved to be good and useful, whether it coincided with Ayurvedic ideas or with Allopathic ideas, Mr. Knight said that in these days every science had to welcome strangers within its gates, to test and prove them whether they be true or false, and if true, to

embody them in its own system if necessary, rejecting from that system such parts as will no longer stand the test. "*If a science fails to do so and adopts a policy of isolation and of withdrawal from the stream of human progress, then its power of helping humanity inevitably decreases, and eventually that science fossilises into a mere superstition— an affair of spells and mantrams, or charms and incantations, of warlocks and witch doctors.*"

இந்திய மருத்துவத்தையும் ஆங்கில மருத்துவத்தையும் பிணைப்பது குறித்து பம்பாய் மாகாண அரசாங்கத்தாரின் மனப்பான்மை எப்படிப்பட்டதென்பதும், சென்னை மாகாண அரசாங்கத்தாரின் மனப்பான்மை எவ்வளவு கீழ்த்தரமானதென்பதும் நன்ருக விளங்கவரும். ஆகையினுல் சென்னை மாகாண அரசாங்கத்தார் அத்தகைய குறுகிய மனப்பான்மையை விட்டு Mr. H. F. Knight கூறியதன்படி நடந்து கொள்வார்களென்று கேட்டுக்கொள்கிறேம்.

## தலைவருரையின் சுருக்கம்

1924-வது ஆண்டு பல எதிர்ப்புகட்கிடையே உஸ்மான் கமிட்டியின் சிபார்சினுல் இப்பள்ளிக்கூடம் திறக்கப்பட்டு இந்திய மருத்துவத்தையும் மேனுட்டு முறையில் போதிய அளவு பாடங்களையும் கற்பித்துக் கொடுக்கப்பட்டுவந்தது. அக்காலத்திலிருந்த எதிர்ப்புகளை விட தற்கால கவர்ன்மெண்டாருடைய எதிர்ப்பு மிகவும் கொடூரமாகவிருக்கிறது.

1939-40-இல் நமது கல்லூரித் தலைவர் விடுத்த நிர்வாக அறிக்கையில் நமது பள்ளியைக் கல்லூரி ஸ்தானத்திற்கு உயர்த்தப்படவேண்டுமென்று கண்டிருந்த விஷயமே தற்கால எதிர்ப்புகளின் முக்கிய காரணமாகும். இப்பள்ளியில் மேனுட்டு வைத்தியத்தைப்போதிக்கும் ஆசிரியர்கட்குப் போதியஅளவு படிப்பில்லை என்றுங் கூறுகிறுர்கள். சீமைக்குச் சென்று மருத்துவத்தில் பட்டம் பெற்றவர்களை இப்பள்ளியில் ஆங்கில மருத்துவ ஆசிரியர்களாக அமைக்க வேண்டாமென்று அரசாங்கத்தாரை எதிர்த்தவர்களாரென்று எனக்குப் புலனுகவில்லை.

மேல்நாட்டு வைத்தியம் கற்பித்து வருவதைக் குறித்து ஆராய கமிட்டி ஏற்படுத்தி இருந்தபோதிலும் அது இங்குக் கற்பித்துவரும் இந்திய மருத்துவத்தையும் ஆராய ஆரம்பித்து சஸ்திர முறையையும், பிள்ளைப்பேறு சிகிச்சையும் கற்பிப்பதவசியமில்லை என்று ஆலோசனை கூறியது. இவ்யோசனை இப்பள்ளிக்கூடம் ஏற்படுத்தியதின் நோக்கத்திற்கு நேர் விரோதமானதாகும். இந்திய சஸ்

திரமுறையை மேனாட்டு சஸ்திர முறையின் உதவி கொண்டு புத்துயிர் அளித்தலே எங்கள் நோக்கமன்றி அதை யறவே யொழித்து மேனாட்டு முறையைக் கையாளவேண்டுமென்பதன்று. பிள்ளைப்பேறு சிகிச்சையுமவ்வாறேயாம்.

இப்பள்ளியில் பழைய இந்திய மருத்துவத்தை மாத்திரம் கற்பித்தல் போதுமென்று அரசாங்க அறிக்கை கூறியதன் காரணம் இப்பள்ளித் தலைவரையும் ரிஜிஸ்ட்ரார் அவர்களையும் கலந்து பேசாததேயாம்.

இரண்டு மருத்துவத்தையும் கலந்து கற்பித்தல் சரியல்லவென்று சொல்வது கோஷா ஆஸ்பத்திரியில் இந்திய மருத்துவ மாணவிகள் கொடுத்த பதிலை சரிவர பொருள் கொள்ள முடியாமையினாலேயாம்.

மேனாட்டு குணபாடங்களை விருத்திசெய்யும் பொருட்டு இந்திய மருந்துகளை ஆராயவாரம்பித்த கர்னல் சோப்ரா மகரத்துவஜத்திற்கு மலமிளக்கிச் செய்கையுண்டென்றும் அம்மருந்து மலத்தின் வழியாக வெளியாக்கப்படுகிறதென்றும் கூறுவதில் யாதொரு ஆச்சரியமில்லை. என்னெனின் இத்தகைய ஆராய்ச்சிகளை இரு வைத்தியங்களையும் கற்றவர்களே செய்தல்வேண்டும். கர்னல் சோப்ரா அவர்கள் பழைமைகளெல்லாம் தற்கால ஆராய்ச்சியின்படி பொய்க்குமென்று நினைப்பது அவர் குற்றமன்று. ஏனெனில் ஆங்கில மருத்துவ முறைகள் நாடோறும் மாறிக்கொண்டே போகின்றமை அவர் கொண்ட கருத்தின் காரணம்.

மேலும் அரசியலார் இருமருத்துவத்தையும் ஐந்தாண்டில் கற்பித்தல் உசிதமல்லவென்றும் கூறுகிறார்கள். ஆனால் இருமருத்துவத்தின் அடிப்படையான விஷயங்களை மாணவருக்குக் கற்பிப்பதனால் அவர்கள் அதைக்கொண்டு மேன்மேலும் விருத்திசெய்ய இடனுண்டு என்பது என்னுடைய கொள்கை.

அரசாங்க அறிக்கையின்படி மேனாட்டு வைத்தியத்தை நாங்கள் கைக்கொள்ளவில்லை. ஆனால் அவர்களும் எங்கள் வயித்தியத்திலுள்ள சில சிறப்பான மருந்துகளையும் தங்களுடைய குணபாடத்தில் சேர்த்துக் கொள்ளாமலிருக்கட்டும். நம் நாட்டில் ஆதியிலிருந்து நம்மிடமுள்ளதைப் பிறநாட்டினருக்குக் கொடுத்தும் பிறநாட்டினரிடமிருப்பதை நம்மதாக்கிக் கொள்வதும் வழக்கமாக விருந்து வருகிறது.

மேனாட்டு முறையைக் கற்றுக்கொடுக்கும் பள்ளிகளில் நம்நாட்டு முறைகளைக் கற்றுக்கொடுப்பதால் இந்திய மருத்துவம் வளர்ச்சியடையாது என்பது முக்காலு முண்மை.

ஜில்லா வைத்திய ஆபீசர்கள் இப்பள்ளியை மூடவேண்டுமென்பது அவர்களிடை ஏற்பட்ட கெட்ட அபிப்பிராயமேயாகும்.

மருத்துவ ஐக்கிய சங்கத்தின் தலைவர் இவ்வாஸ்பத்திரியில் போதிய நோயினர்கள் மருத்துவம் செய்துகொள்வதற்கு வருவதில்லையென்று கூறுவது அறியாமையின் பாற்படும்.

ஆகையினால் பொது மக்கள் இந்திய மருத்துவத்தை நிலைநாட்ட ஒத்துழைக்க முன்வரவேண்டுமென்பது என் வேண்டுகோள்.

## சென்னை மாகாண எல். ஐ. எம். விசேஷ மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்கள் வருமாறு :—

1. மாயவரம் Dr. V. பொன்னுசாமி L. I. M. அவர்களும் திருவனந்தபுரம் Dr. K. R. கோவிந்தன் L. I. M. அவர்களும் துஞ்சியதின் காரணமாக எழுந்த துக்கத்தை அவர்களுடைய குடும்பத்தார்களுக்குத் தெரிவிக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

2. முதல் உஸ்மான் கமிட்டியில் இந்திய மருத்துவக் கல்லூரியும் ஆஸ்பத்திரியும் ஏற்படுத்தி, அதில் போதிய அளவு மேல்நாட்டு வைத்தியமும் கற்பிக்க வேண்டுமென்று தீர்மானித்ததை அனுசரித்து ஒரு ஆஸ்பத்திரியையும் ஏற்படுத்தினார்கள். வழித்தோன்றிய மந்திரிசபைகளும் அதை ஆதரித்துவந்தன. ஜூன்மாதம் 21 ம் தேதி அரசாங்கத்தார் விடுத்த அறிக்கையில் தப்பபிப்பிராயங்களுடன் ஷெ உஸ்மான் கமிட்டியை ஆதரிக்காமல் பேசியது இந்திய மருத்துவத்திற்கு அழிவேயாகும். ஆதலால் அரசாங்க அறிக்கையில் கண்டது ஞாயமற்றதாகும்.

3. விக்டோரிய கோஷா ஆஸ்பத்திரியில் இந்திய மருத்துவ மாணவிகள் கொடுத்த பதிலுக்கு அர்த்தம் தெரியாத லேடி சூபரின்டெண்ட் "வாதம்" என்பதற்கு காற்று என்று பொருள் கொண்டு கேலி செய்ததை அரசாங்க அறிக்கை எடுத்துக் காட்டியது மிகவும் வருந்தத் தக்கதாகும்.

4. பிற்காலத்து இந்தியாவில் வைத்தியம் செய்பவர்கள், ஆயுர்வேத, சித்த, யூனானி மேனாட்டு வைத்தியங்கள் எது கற்றிருந்தபோதிலும், ஒரு வைத்தியத்திலிருந்து சிறந்த வைத்திய அங்கங்களை எடுத்துக்கொள்ளல் வேண்டும் என்று முதல் உஸ்மான் கமிட்டி கூறியபடி நடந்துவருவது இந்திய மருத்துவப் பள்ளிக்கூடம் ஒன்றேயாதலாலும், மற்ற கல்லூரிகளில் அவ்வாறு நிகழ்வதில்லையாதலாலும் அதை ஒரு கல்லூரியாக மாற்றி அதில் படித்து வெளி வருபவர்களுக்கு யாதொரு தடங்கலும் இல்லாமற்படி காக்க அரசாங்கத்தை வேண்டுகிறோம்.

5. காலரா இன்ஸ்பெக்டர் வேலைக்கு எல். எம். பி-களும் எம். பி.பி. எஸ்-களும் மாத்திரம் தகுதியுள்ளவர்கள் என்றும் எல். ஐ. எம் களை எடுத்துக்கொள்ள மாட்டார்கள் என்ற கவர்ன்மெண்டு ரூலை (2224. P. H. Dated 25-5-'40) மாற்றி எல். ஐ. எம்-களையும் சேர்த்துக்கொள்ளும்படி வேண்டுகிறோம்.

6. தினம் 45 பேருக்கு மேல் ஆஸ்பத்திரிக்கு வருவதாயிருந்தால் ஒரு கம்பவுண்டர்போட வேண்டியதிருக்க, குண்டூர் ஜில்லா போர்டு ஆஸ்பத்திரியில் கம்பவுண்டர்களை எடுத்ததைப்பற்றி வருந்தி குண்டூர் ஜில்லா பிரஸிடென்டுக்கு அம்மாதிரி செய்யாதிருக்க ஓர் வேண்டுகோள் தீர்மானம் சமர்ப்பிக்கப் பெற்றது.

7. 1941-ம் வருஷம் ஜூன் மாதம் 21-தேதியில் அரசாங்கத்தார் விடுத்த அறிக்கையில் "பழைய காலத்திய மருத்துவங்களைக் கற்பிப்பதில்லை" என்ற அசம்பாவிதமான விஷயம் கண்டிருப்பதை எதிர்த்து அரசாங்கத்தாரை தாம் மொழிந்தது தப்பென்று சொல்லும்படி மகாசபை ஒரு தீர்மானம் நிறை வேற்றிற்று.

8. கிருஷ்ணு ஜில்லா ஸ்பெஷல் ஆபீசரால் எடுத்து விட்ட 25 இந்திய மருத்துவசாலைகளில் 18-ஐ மறுபடியும் ஏற்படுத்தியதற்கு வந்தனம் அளிப்பதுடன், மிகுந்த ஏழு வைத்திய சாலைகளையும் ஏற்படுத்த வேண்டுமென்று இம்மகா நாடு கேட்டுக்கொள்ளுகிறது.

### கார்ப்பாசம்—பருத்தி

எல்லாந் தணியு மெழிலுண்டாந் தாகமறு
நல்லாய்ப் பசிமே னடக்குமே—சல்லாப
மேற்பாயு மொண்மை வீழிக்குண்டா மெந்நாளுங்
கார்ப்பாசத் தாலேநோய் கள். (168)

### இலவு

தேறு நோய்களென்னுஞ் சிங்கக் குழாமெல்லா
நீறுகக் கொல்லு நிசமாக—வீறுன
தாரணியிற் பண்டிதவே தண்ட வனத்தில்வளர்
பூரணியா குஞ்சரபப் புள். (169)

### துளசி

போலாட்டு வித்துதிரப் புண்பீ நசப்பிணியை
மேலாட்டு வித்து விளங்குமே—சால
வருந்து முடற்குவெப்பு வாராம லோட்டும்
பிருந்தமைப் பயித்தியத்தைப் பேய். (170)

### பனை

மேகவெட்டை சோகை வெறிமுதலா யுள்ளதெல்லாம்
போகவட் டைநல்கிப் புரக்குமே—வாகடர்கள்
உண்ணவரு புற்றுளி யோடே வருபோந்தை
பெண்ணை பனைதாலம் பேர். (171)

### முல்லை

போநோ யிபமீறிப் போகாம லேயடக்கித்
தீனமில் லாமற் செழிக்குமே—தேனி
லளவு பெறச்வ ரரைத்துருட்டி யுண்ணத்
தளவமத மாவங்கு சம். (172)

### பிரம்பு

வாங்காப் பிடிப்புமுதல் வாயுவையெல் லாமடித்துப்
பாங்கா யருளுவது பார்த்திருந்தும்—நீங்காத
சாத்திரத்தைக் கண்டிருந்துஞ் சாரமுன மோரான
வேத்திரத்தை நம்பாமை வீண். (173)

### கூவிளம்—வில்வம்

கொண்டமைச்சு தந்திரி கொணர்ந்த கொடுங்கோலைக்
கண்டித்து மெய்யுறுதி காட்டுவார்—பண்டிதர்கள்
பூவுலகி லாயுள்விதி பொய்யா முறையாக்கக்
கூவிளத்தின் செங்கோலைக் கொண்டு. (174)

### விளாம்பழம்

மன்னன்முத லாமூவர் மாறுபா டில்லாம
லுன்ன நினைத்த துதவுதலாற்—பன்னிச்
செபித்த வுடலாண்மை சேர்வித் திடலாற்
கபித்தமவிழ் தக்கற்ப கம். (175)

### வேப்பம்பட்டைக் குடிநீர்

தொந்தித் தகலாத தோட சுரமகன்று
சிந்தைக் கனுகூலஞ் சேரவென்றால்—வந்தித்துத்
தாபச் சுரமுமறச் சஞ்சலமி லாதருந்து
நீபப் புறணிகுடி நீர். (176)

### சிந்துவாரம்—நொச்சில்

நோயார் கலியை நொடிக்கு ளருந்தவெம்மை
யோயாம ஞளு முயர்த்துதலுக்—காய
வந்தமுதல் நண்பாகி வாதத்தை யேயுறலாற்
சிந்துவா ரங்கனலுந் தீ. (177)

### ஆடாதோடை

வாசத்தி னுடலில் வாசஞ் செயவுயிர்க்கு
நேசத்தை நாளு நிகழ்த்தலாற்—பூசித்த
போரா தரவு பிறக்க வுஞற்றுதலால்
தாரா யுளைவளர்க்குந் தாய். (178)

### பனசம்

மந்திரியை யாதரித்து மற்றவனை யுங்கலந்து
வந்தபொழு தும்மமைச்சை மன்னுமல்—முந்தி
யனசனமா கத்தானே யாக்கைக் கிடலாற்
பனசந் தருமிறைக்குப் பார். (179)

### சரவணம்

சீறி யடங்காத சேனு பதியமரில்
ஏறிய போதி லெதிராளி—வேறே
கரவடத்தா லேயவனைக் கட்டி யடக்கச்
சரவணமே நாகபா சம். (180)

### குடசப்பால்

காய்ச்சாவெள் ளாட்டுப்பால் கட்டிகட்டி யாகமுன்னே
தோய்ச்சதுபோ லுண்டாற் சுகமுண்டாம்—வாய்ச்சு
விடநற்றே கத்து மெலிவையெல்லாம் போக்குங்
குடசப்பா லான்முரித்துக் கொள். (181)

### அல்லி

மூலிகளிற் செய்யு முறைமைகளி லேயதிக
மேலுகையாற் றூக மிலாமையால்—வாலறிவு
முந்துகையாற் றண்மை முதிருகையான் மற்றதினுஞ்
சந்திர மைத்திரிசீ சம். (182)

### நாகம்

மானிடர்க்கு மண்ணில் வளருநவ லோகத்திற்
பானு வெனச்சிலது பந்திக்கத்—தானுறுதி
யாகுதலா னன்மை யணுகலுடற் காக்குதலால்
நாகமது வேவாழு நாள். (183)

### நெல்லி

அமைச்சனெனு மந்திரியை யாளாக்கிக் கொண்டு
கமைப்பை யுயிர்நிலைக்குக் காட்டி—யமைப்புடைமை
நேம மிகநெய் நிறுத்திவைக்கு மெஞ்ஞான்றும்
ஆமலக நெல்லியை யா. (184)

### குளவி—காட்டுமல்லிகை

பாரி னெடுநாள் பழகித் திரியவென்றால்
காரிகையா ரின்பநலங் காணவென்றால்—நேரே
உளவுறுதி மேலுமிக வுண்டாக வென்றால்
குளவி தனைநிசமாய்க் கொள். (185)

### இறுங்கு—சோளம்

மன்னவனெங் நாளு மகிழ வரசுரிமை
என்னி லிசைவா யிசைக்கின்றேன்—வன்மை
யுறுங்கன மாக்கைக் குறுதியா மெய்மை
யிறுங்குமா வேயுரமா யெண். (186)

### ஏருழுதல்

எல்லா வுயிர்களுக்கு மின்பமிக வுண்டாக
வல்லாண்மை பைங்கூழ்க்கு வாய்க்கவே—யில்லாமை
செல்ல மகிழ்ந்து செனங்கள் சுகமெய்தச்
செல்லுலகி லேருழுஞ் சீர் (187)

### நிம்பம்

கைத்தாலும் பின்னலக் காரம்போ லேருசித்துப்
பித்தா யவிடதத்தைப் பின்னிட்டு—வைத்தமகா
விம்ப மருவினவர் மேனிக் களித்திடலால்
நிம்ப முயிர்நிலைக்கு நேர். (188)

குலுத்தம்—கொள்

என்றுரைக்கும் பேர்புனைபு மேந்தலுக்கு நண்பாகு
மொன்றான தந்திரியை யோட்டும்—வென்றி
பலுக்கு முயிர்நிலையைப் பாராட்டுங் காணங்
குலுத்தம் பரியசனங் கொண்டு. (189)

ஆடகி—துவரை

என்ன வுலகி லிருக்கும் பிடகரெல்லாம்
பன்ன முதலரசின் பாலாகிப்—புன்னலியை
யோட விரட்டி யுயருநெடு மால்பதியாம்
ஆடகியின் பேர்துவரை யாம். (190)

சூரம்—கடலை

வேந்துமுதல் மூவருக்கும் வீதத் தொடர்பாகிச்
சாந்தமுமாய் வெப்பமுமாய்ச் சட்டகத்தை—யேந்திவரு
வீரம் புலியுடனும் மேலிட் டதைவென்ற
சூரங் கடலையென்று சொல். (191)

சுரபுன்னை

தேக நலியத் தினமு நலிவுண்டாய்
ஆக நலியு மறிவில்லாய்—நீகேள்
குழையை வசம்பிந்திற் கூட்டி யயில
வழையை யனுசரித்து வாழ். (192)

மலடுநீங்க

மலட ரிவரென்று வையகத்தா ரேசார்
பலரு முமையினிது பார்ப்பார்—குலவுபிசின்
மாதப் புளுவெச்சம் வால்மிளகொ டுண்டுவரச்
சூதத்தா லுண்டாகுஞ் சூல் (193)

கஞ்சா

நிட்டை யுடையார் நிகழ்த்தியசொல் கேட்டுமிகு
சட்டை யகத்தியநெஞ் சத்திற்கு—வட்டமுறை
யார வமுதா யயிலவரு கற்பமெனக்
கோரகையி னுலடங்குங்கூன். (194)

ஆம்பல்மணக்கலவை

தாகமெனும் வெய்ய தபன பயித்தியமா
ரோகமுதல் குங்குமகோ ரோசனைகள்—பாகம்
அமையப் பொடித்தபொடி யப்பியதை மோந்தாற்
குமுதமல ராலொதுங் கும். (195)

## வராகபட்சணி

பசித்தீ பனமிகுந்து பண்ணிடமெப் போதும்
பொசித்தா தரமதிக போகம்—வசித்துமலே
நோராக வேணுமென்ற னீகே ளுணவாக
வாராக பட்சணியை வை. (196)

## பாளிதம்

விட்டகலுந் திண்மை விளங்கு மதுமேகக்
கட்டகலுங் கட்டங் கழலுமே—சட்டகமு
நீடு நரையாது நீடுழி வாழ்ந்திருப்பாய்
பாளிதத்தாற் பித்தசோபை. (197)

## திலம்

திட்டாந் தரமனிதர் தேக வுதிரமுண்ணப்
பட்டசிந்தா மூடுமெண்ணெய் பட்டாவி—விட்டு
நிலமீ திறத்தலறி நீயதைத்தொ டாதே
திலநன்மைக் காட்டுக்குத் தீ. (198)

## மாடம்—உளுந்து

ஓஞ்ச நடையினரா யுள்ளாவி யற்றிடல்போற்
சாஞ்ச வுடனேய்ச் சனரெல்லாங்—காய்ஞ்சநெய்யிற்
கூடத் தனையட்டுக் கொள்ளப் பதமான
மாடத்தாற் றிண்மையா வார். (199)

## கடலை, நெய், சர்க்கரைக்கலவை

உடலுக் கதிக முணர்வுக்கு மெய்மை
வடிவுக்குக் காந்தி வரிசை—படியாகி
யெக்காலுஞ் சூர மிழுது மருவநுகர்
அக்காரத் தால்வலிமை யாம். (200)

## பசுவின் பால்

காயும் பயித்தியவாங் காரத்தை முன்னடக்கி
யோயு முடலே யொடுங்காமற்—காய
விதையை யகற்றிநல மீட்டுதலா லாவின்
சுதையாலுண் டாகும் சுகம். (201)

## அளை—வெண்ணெய்

மேனேக்கிச் சிரணத்தை மேவா தடக்கிமெலி
யூனக்கி யாவி யொடுக்கவந்த—வீன
இளைபித்த சேட்டை யெனவருநோ யெல்லாம்
அளையினுற் றீருமை யல். (202)

## கறிக்கூட்டு

கற்பம் பொசித்துமகா காயசித்தி பண்ணவருஞ்
சொற்பமெங்க ளாக்கையென்று தோத்திரிப்பார்—பற்ப
முழுதுமத லாதுகறி மோதகமே தேனும்
இழுது பொசித்தவரை யே. (203)

## புலிச்சளி

காமனெனத் தேகத்தைக் காமே சுரமாக
நோமெலிவை யெல்லா னொறுக்கியே—தீமை
யகுக்கக் கருவாகி யாதார மாகும்
புலிச்சளிநோ யோடுசெயும் போர். (204)

## அயினி

ஆதார மாகி யறிவுக் கறிவாகிச்
சேதார மில்லாமற் றேகத்தைப்—போதை
செயினு மமுதாகத் தேற்றுதலா லாவி
யயினிவடி வேபுவனே யாம். (205)

## நவநீதம்

கொல்லாமற் கொல்லவந்த குன்மகய பித்தமெனும்
பொல்லா வியாதிப் புலிக்கெல்லாம்—நல்ல
சுவையா யழியாத துப்பினில்வே றுன
நவநீத மென்பதுசெங் நாய். (206)

## அபூபம்

எப்போது நன்மை யினங்கட் கினமாகி
யப்போது தண்மை யளித்தலால்—வெப்பைத்
தபாது தரந்துயிரைத் தாங்குதலி னாலே
அபூப மூர்ப்பறவை யால். (207)

## தக்கிரம் = மோர்

எந்தவித மானு மெய்துவித்துப் போசனத்தைச்
சிந்தை மகிழச் செரிப்பித்து—முந்துடலைப்
பக்குவமாய்க் காத்துப் பசியை மிகுவித்துத்
தக்கிரம்போக் கும்பித்தத் தை. (208)

## பண்ணியம்

பசிப்புக் கிடமாகப் பண்ணியபோ தெல்லாம்
பொசிப்புக் கிடமாகப் போற்றி—முசிப்பகலத்
திண்ணியவாய் நாளுஞ் செழிக்க முறைதாலாற்
பண்ணியமே தேககற் பம். (209)

பானகம்

புன்பிணியா கும்பகையைப் போராடி வென்றவயர்
வென்ப தொழிய விளைப்பாறித்—தன்பவன
மான வுடலி லனுதினமு மாந்துருசிப்
பானகநன் மைக்கிருக்கப் பாய். (210)

கருணை

போசனத்தின் பூணுகிப் போசனித்த பேர்க்குமகா
ராச வுபசார நல்குதலாற்—பேசு
தரணிமிசைப் பண்டிதர்க டாமறியச் சொன்னேன்
கருணை சவுக்கியத்தின் கண். (211)

உணவு

ஆணே றுடலுக் கநுதினமு மன்பாக
வூணே பெரிதென் றுரைத்திடலாற்—காணு
யணவுமுயிருக் கனுகரண மான
வுணவுவுர ணுகமமை யும். (212)

திலம்

திலத்தினது சம்பந்தந் தீதே யெனினுஞ்
சலத்தினது துர்க்குணத்தைச் சாடி—நலத்தை
யுலாவ வுயிர்நிலைக்கே யுண்டாக் குதலான்
மலாவக மாதரார்வ லிமை. (213)

அரி

தீதான பித்தத்தைச் சேர்ந்தபொரு ளென்பதனை
யாதார மாக வறிந்திருந்தும்—ஆதே
நணுமுறைமை யெல்லார்க்கு நண்ணுதலி னாலே
உணுமரிபா ரோர்க்குமுறை யூழ். (214)

தேன்

அனுபான மாய்ப்பி னவிழ்தமுமாய்த் தோன்றிக்
கனமான தேகநிலை காட்டிப்—பினுமே
யரசன்முதன் மூவரையு மாட்டுவித்த லாலே
பிரசத்தி னற்போம் பிணி. (215)

சாதிநலம்

ஈன்றவர்க்கு மொவ்வா விழிவென்று முன்னூலிற்
சான்றவரே கூறுதலாற் றப்பாம—லூன்றணிய
நீதியமு தானுலு நீசப் படிவருணச்
சாதிநல மாகாது தள். (216)

### கூஷ்பாண்டம்

தின்னுரிசை யாலே சிலராசை வைத்துழல்வார்
பின்னமுற நோயைப் பெரிதாக்குந்—தின்னுடலைத்
தீழ்ப்பாக்கு நன்மருந்தைத் தீதாக்கு மாதலினாற்
கூழ்ப்பாண்ட மேதவிட்டுக் கூழ். (217)

### உறைக்கனி

போன வியாதிகளைப் போற்றி யழைப்பிக்கும்
ஊனை வளர்க்கு முபாதிக்கே—யான
திறத்தா லுனக்குரிசை தின்னமுதா னாலும்
உறைக்கனியின் பண்புதனை யோர். (218

### படலிகை

பத்தியத்துக் கானதொரு பண்டமா யுண்டவர்க்கு
நித்தியத்தைத் தானே நிறுத்தலாற்—சித்தி
வடிவுறலா லின்பம் வருதலினாற் சொன்னேன்
படலிகையா விக்குநிதிப் பை. (219)

### வங்கம் = கத்தரிப் பிஞ்சு

வாதபித்த சேத்துமத்தின் வர்க்கமாய் நற்கறியா
யாதரவாய் மெய்யை யடைதலா—லாதாரத்
தங்கமென வாயுள்வே தத்தரெல்லா ரும்புகன்றார்
வங்கமுயிர்க் காடககருவை. (220)

### உடை-வேல்

தந்த வலியசைவு சன்னி யெயிறுகட்ட
லெந்த வலியு மிரியவே—சொந்த
முடைய மருத்துவரே யோதினார் நீதி
யுடையின் பெருமையைநீ யுள். (221)

### வலம்புரி

கேட்ட வுடனேயின கேளோ டகன்றோடுந்
தாட்டீக மெல்லாந் தவிடாகி—மீட்டு
நலம்புரிமெய் யாமிடத்தை நண்ணுதலில் லாமல்
வலம்புரியென் றோதீர்நா மம். (222)

### கதலி

சன்னிமுத லைக்கலிக்கச் சாரத்தா லேயகற்றிப்
பின்னு மெரியைப் பிரித்தோட்டி—வன்னி
முதலெனமெய்க் கேவலிமை முன்னுக் குதலாற்
கதலிநலிப் புள்ளினுக்குக் கல். (223)

## பூத்தோடுக்குநார்

தெய்வீக மாகமணஞ் சேர வருபொழுதி
லுய்வித மாக வுறுதியாய்ச்—செய்கை
தனையின்பப் பாற்படுத்திச் சந்ததமுங் காட்ட
நனையின்பப் பூத்தொடுக்கு நார். (224)

## பாவிரி

கொற்றவனை மாட்டிக் குணத்தைப் பிறிதாக்கி
மற்றவனை யும்பழித்து மற்றதனைத்—தற்றுணையாய்
மேவிவரச் செய்திடலால் மேதினியி லேயுரிய
பாவிரியி லேயறிநுட் பம். (225)

## சைவலம்

கொள்ளும் பலநோயும் கொண்டு குணங்களெல்லாம்
விள்ளு மறிவை வெளியாக்குங்—கொள்ளுமின்பங்
கைவசமா கப்பரிவு காட்டு மகாமூலி
சைவலமென் றேது முனச் சம். (226)

## உற்பலம்

நோயி லலைந்தபின்பு நொந்த வுடறேற
நேய வவிழ்த நிலவுதல்போ—லாயாசத்
துர்ப்பலத்தைச் சேருடற்குத் துர்ப்பலமெ லாமாறி
யுற்பலத்தா லின்பநிறை யும். (227)

## மரிசம்

திரிமூர்த் திகளிற் றிடமாக முன்னே
யறிமூர்த்தி போலுவமை யாக—முறைமை
தருமுற் றிரிகடுகிற் றனேமுன் னுகும்
மரிசந் தனையாக மம். (228)

வாதத் தையுமதனுல் வந்தமைந்த வெம்மையையுஞ்
சீதத் தையுமுறிவு செய்திடலால்—ஓது
வழக்கா யுலகிலெரி வண்மை யெனினும்
அழற்காயை விட்டவர் யார். (229)

முன்னுரைக்குஞ் சன்னி முரணடங்கச் சாடிமடி
தன்னை யடிக்கத் தணலாகிப்—பன்னுகறி
தங்குமன மாகிச் சாதகமா யாளுமென்று
இங்கு மகிமைமுறை யில். (230)

### கந்தம்

நோய்மூலக் கோடை நொறுங்க வுடனிலத்திற்
பாயு நலமாம் பயிர்தழைக்கத்—தோயகுணந்
தந்து வளமை தழைக்க நலம்பெய்யுங்
கந்தமென வந்ததொரு கார். (231)

### விறகு

எக்கியத்தி லும்புதிய யாகத்தி லும்மகஞ்செய்
முக்கியத் திலுமணஞ்செய் மூன்றிலுந்—தொக்கவிழ்த
உந்திடத்தும் லோக முருகிடத்து மூளுதலால்
இந்தனந்தென் கீழிறைமெய் யில். (232)

### சிவை

பீடமா மாடப் பெருமையாம் பின்னுமகா
கூடமாங் கூடக் கொலுவுமாம்—நாடு
பவனமா மாடரங்காம் பள்ளியறை யாகுஞ்
சிவையவிழ்த லோகமிவை சேர். (233)

### கஞ்சி

அங்கியாம் பித்த வனலை யவிப்பதற்குக்
கங்கையாம் பின்னுங் கதவாகும்—பங்கமுறச்
சூழுமொரு வாயுச் சுழலுக் கனுதினமு
மோழை வினைத்தாதுக்கு மூள். (234)

### நெற்றிக்கண்—நெருப்பு

எக்காலு மவிய யின்று மதனைவென்று
புக்காரை நல்ல பொருளாக்கி—மிக்குணவும்
ஆமுறையா னுளு மடுக்களைப்பாங் காதலினுற்
காமரமா டேறிநுதற் கண். (235)

### நீறு

நீரைவச மாக்குதலால் நின்மலமாய்த் தோன்றுதலால்
ஆரு மதுகடைசி யாதலினுல்—வீரம்
உடைமையான் மெய்மையா மொண்மேன்மை யாலே
யடலை யரனுருவே யாம். (236)

### மெய்

சஞ்சலமில் லாதறிவு தன்வசமுண் டாகுதலான்
நெஞ்ச மியக்கி நிலைத்திடலா—லஞ்சமனு
நீத வொருமை நிகழலால் நீக்கமென்னும்
வீதவத்துக் கானதுணை மெய். (237)

## இருந்தை

ஆகு முலோக மவிழ்தங் குடிநீர்தூள்
பாக முதலாகப் பண்டிதர்க்கு—வாகாய்ப்
பொருந்துவிப்ப தானநெருப் புக்கமை தியாலே
இருந்தை யெரிவா யிறை. (238)

## எழுநா

தழைத்து வளர்ந்ததிக சாகைகளுண் டாகிச்
செழித்தபிற குண்டாகுஞ் சீரால்—கொழுத்துத்
துலங்கு மெழுநாவிற் றேன்று முருவப்
புலிங்க மதுமுளரிப் பூ. (239)

## கழற்சிக்காய்

கோசஞ் சுருங்கக் குடிலமிகு மன்னவனல்
வீசஞ் சுருங்காது மேலிட்ட—மோசம்
ஒழிய மருந்தாகி யொத்தாசை செய்யுங்
கழலா கியகழற்சிக் காய். (240)

போலறுத்து நாட்டப் புலனுக் கிசைவாகி
ஞால மதிக்க நடத்துமே—மேலுளபுத்
தேள்வலிமை யென்று தெரிவித்துத் தெய்வீக
வாளகம் மிருளேயரி வாள். (241)

## குழை

வன்மையென் றெல்லாரு மயங்காம வீரமுண்டு
மென்மையென்று நன்மை விளம்பவே—தன்மை
தழையவுறு கமலங் தாபரித்த லாலே
குழையா லினிதுபெரு கும். (242)

## ஈயம்

அத்தூளி னாலே யகலும் பிணிகளெல்லாம்
பத்தியங்க ளொன்றாலும் பாழின்றி—நித்தியமு
மந்திரிபோற் றேனில் வனத்திலுண் மண்டலத்திற்
சுந்தரியா லாமீயக் தூள். (243)

காசத்தைப் போக்கிக் கபத்தை வழிப்படுத்தி
ராசற்குத் தன்னரசு நல்குதலான்—மாசற்ற
போது மதனைப் புறப்படுத்தித் தானுறலாற்
சீதையொளி வேநேத்தி ரம். (244)

வாருதிக்குப் பூஷணமாய் மன்னவனுக் காதரவாய்ச்
சாருகினு மன்னனுக்கே சத்துருவாஞ்—சேரவரு
சாயல்வகை யந்தாதி சத்துவத்தையே காட்டுங்
காயலில வணச்சா கை. (245)

ஐந்துப்பு

காவா யுலவுபரி காரிகளுக் காதரவாம்
நாவா யுரையை நடத்தவே—பாவகமா
நூல்வா யவிழ்த நுகல்வார்க் கினிதுகட்டுப்
தோல்வாய்நீ ரானுப்பஞ் சும். (246)

உண்டா லுடல்வலிமை யுண்டா மறுதாது
முண்டா மறிவு முடுக்காகும்—பண்டு
பணுமுறைமை கையறிந்த பண்டிதர்க ளாலே
புணரியற லானீரும் பொன். (247)

மங்கலர்

கேசத்தைக் கண்டித்துக் கிட்டச் சுகமியற்றி
மோச வமைச்சை முடுக்கியே—நேசத்தைத்
தங்கவுயிர் நிலைக்குத் தாபித் திடலாலே
மங்கலரோ திக்கிகலா வார். (248)

கள்ள மடையார் கருத்தைப்போ லீசனனி
யுள்ள படிபோ லுனுமவிழ்த—வள்ளலெனப்
பால்வெள்ளை சுவேதமுதல் பாரதிமெய் சுக்கிலமெய்
வால்தவளம் பாண்டு வெண்மை. (249)

தன்னை யெவரறிவார் சர்ப்பனைசெய் யுஞ்சலநோய்
சன்னிமுதல் நாசிவழிச் சாடியே—பின்னு
முதுநோயை யுஞ்சலமாய் மூக்காற் கழற்றும்
மதுபீசத் தூளினுண் மை. (250)

நேயம்

ஆகி யிருந்து மவற்கே பகையாகி
வேகமிகு தந்திரியை வேருக்கி—யோகைமிகப்
பொங்க வமைச்சனுக்குப் புந்திமகி ழத்துணைசெய்
அங்கி யரசற்குநே யம். (251)

இல்லம்

வேற்றுமைகள் செய்திடல்போல் வேந்துமுதல் மூவரையுந்
தேற்று மிதுநிசம்பார் திட்டாந்தம்—போற்றுணிமை
சொல்லு மருத்துவர்கள் சோதனை நூ லாதிமுறை
இல்லமண் மயக்கமுறை யில். (252)

மாத்திரையாய் நோயினத்தை மாட்டி யுயிர்நிலைக்குப்
பாத்திரமா யாதரிக்கும் பண்டிதரே—நேர்த்தியதைச்
சொல்தேரன் வேறே சுருதி முறைபிடுமே
வில்வலியை நீரறிகு வீர். (253)

மல்லி

சேனுபதி யமைச்சர் சேவிக்க நன்முறைமை
யானு திடலா லனுதினமு—மூனிலையை
நல்லவலி யுடைத்தாய் நாட்டுதலா னட்டில்வளர்
மல்லி யரசனுடை மை. (254)

ஆதிபரை காளி யரிவண்ண மிப்படியென்
ளேதி யுலகிற் குணர்த்துதல்போ—னீதிமுறை
யைநீனில மியம்ப லாகியகா ளிங்கமணி
மைநீல் கறுப்புகரு மை. (255)

அசமதாகம்

நாய்முசலைப் பற்றுதல்போ னடுமுன்னே சேத்துமத்தைப்
போய்மடிக்கு நோயைப் பொடியாக்குங்—காயம்
நிசமதா கப்படிமே னீடித்து நிற்க
அசமதாகங் குளிர்மை யை. (256)

திரிபுரை

ஏரண்ட நேயத்தி லிட்டெரித்துண் டாலுமன்றி
வேருண்டை யாக்கி விழுங்கிடினும்—நேர
யரசு மமைச்சு மடிபற்றி நிற்கத்
திரிபுரைசேட் பப்பிணிக்குத் தீ. (257)

காஞ்சிரக்குளிகை

பிடிப்பு விடவாதப் பேய்நலிவு செய்யும்
மடிப்பு வினையெவையு மாட்டி—யுடற்கதிக
மாஞ்சிலது சித்திகளும் வாய்க்கப் பரவுதலாற்
காஞ்சிரமா காச குளிகை. (258)

ஈண்டுச் சனங்க ளிடமு மலக்காங்கை
தீண்டுவம்மை யாநோய் செழிக்குமே—கூண்டு
உடலாகத் துர்ப்பலமா முற்றபிணி யோர்க்குக்
குடவாச மாகாது கொள். (259)

## வெண்குட்டம்

மூன்று மொருநிறையாய் முட்காய்வே ளைச்சாற்றி
னூன்ற வரைத்ததனை யுண்டைசெய்து—தேனில்
விடாம லொரு மண்டலமுண் வெண்குட்ட மாறுங்
குடாவடியெச் சங்கடுகு கொள். (260)

சூரணம்பற் பங்கிருதந் தூளெண்ணெய் லேகமுதற்
பேர ணவிழ்தவெகு பேதங்கள்—நோறிந்து
பாரி லினியவனு பானங் களினுநிதஞ்
சீரை தனிலறிந்து தின். (261)

மச்சிட்ட மேற்கட்டு மாளிகையே யானுலு
முச்சிட்ட மாயிருக்கு முல்லாபர்—மெச்சு
வதான பரியங்கம் வைக வழகாக
விதானத்தைக் கட்டுவது மேல். (262)

## முத்தோடமற

தகிவே ரிவை மூன்றுந் தானோர் நிறையாய்
மகிழிலைநீ ராலரைத்து மாத்திரை—மிகவுருட்டித்
தேமோ ரறலிலுணச் சேட்பபித்த வாதமறும்
தாமாலங் கத்தூரி தா. (263)

விளவே ரரிதகித்தோல் வேலம் பிசினி
யுளவோர் நிறையபரைத்த வுண்டை—குளநெய்
அமரியிலுண் வாதபித்த மையிவைபோ மெய்யே
குமரி யிரதத்திற் கூ. (264)

கொஞ்சிக் கனிரசத்திற் கூசாம வூறவைத்தே
யஞ்சுநா ளாகியபின் பிளநீ—ரிஞ்சியிதிற்
காச மிருமல் கயநோ யகல வென்றூற்
கோசிகமூ லத்தையுணுங் கோள். (265)

நிறைக்கு நிறைமிளகு நேர்வாளங் கொட்டை
முறைக்கனிநீ ராலரைத்த வுண்டை—யறற்குள்
பருக வுளைப்பறுநீர்ப் பாடறுமுண் பாலால்
வெருகுகண்டு தீயது வேர். (266)

தன்னையவித் தக்காரஞ் சாதிக்காய் சாபத்திரி
துன்னக் கலந்துருட்டித் துய்க்கவே—யென்னபல
மூள்வதுகாமேசுரமா முன்சுக்கிலத் தம்பனமாம்
வேள்மனை முதுபூமி வேர். (267)

தூளைத் திலநேயஞ் சூழ நெருப்பாற்சுட்
டாளப் படும்புண்க ளாறவே—நீளத்தி
லிட்டதன் மேலப்பி யிடுமுன் குணமாகும்
பட்டதின் பட்டையினுற் பண். (268)

பந்தத்தை நீக்கிப் பழமலத்தைப் போக்குதலாற்
கந்திப் பருப்பும் கடுக்காயும்—வெந்த
பயநிதமு மாருமற் பானிக்க வாரம்
அயன்மனையார் காயசித்தி யாம். (269)

சேர்வாயு மாதருக்குத் தீர்ந்து வலிமைமிகும்
பார்மீ தருக்கப் பழுப்புநீர்—ஆரத்
தடிப்புறவூ றிப்புலர்ந்து சார்பு கறிக்கான
கடிப்பகையொ ன் ருற்சூத கம். (270)

தன்னை யெழுப்பிடுபித் தப்பிணிக ளைத்தீர்க்கும்
பின்னும் பசியைப் பெருக்குமே—பன்னமுதல்
நிச்சயமா கப்புளிபுன் னேர்கறியா ணத்தருந்தும்
அச்சமச்ச மாகியப யம். (271)

மூன்று மொருநிறைமேல் முக்கடுகு முக்கழஞ்சும்
ஆன்ற னறலா லரைத்துருட்டி—யூன்றன்
கறுப்புக்கும் வெண்மைக்கும் காடிவெண் ணெய்புண்போம்
வெறிப்பகைநிம் பந்தகரை வேர். (272)

பால்

எய்த்தவுடல் பருக்க வெப்போதும் பாலுதவி
மெய்த்தனுவி லேமுதுமை மேவாம—லுய்த்த
லுதவுதலாற் சுக்கிலத்தை யோம்புதலி னுலே
அதவு மனிதருக்கே யாய். (273)

வாயுபோம் பேச்சு வதறல்போந் துன்மேகத்
தேயுபோங் காயத் திமிரும்போ—மோய
விடாதறவி னூடந்த வேரைமத் தித்துண்ணக்
கடாசலகண் டிக்கழுத்த கை. (274)

வாள்போ லறுக்குமந்த வாதத்தோ டைகலந்தாற்
றேள்போற் கடுக்குந் திமிராகு—மீள
வுடலையத னுலிருந் துப்புடனே யுண்டாற்
கொடிவேலி வாதத்தைக் கூர். (275)

கிளர்ந்த வைத்தியர் சொற் கேட்டுடலிற் காமம்
வளர்ந்தமட வார்முயக்க மாற்றி—புளந்திடற
லாஞ்சுவாசச்செல வகற்றி இருப்பார்மெய்
காஞ்சுகமா மோடுநலி கள். (276)

ஆமயிலை யிற்பாய்ச்சி யாட்டியதில் கடுகு
மோமமு மத்தித் துருட்டியே—சீமுகுமெய்
நீளிரண குட்டமெல்லா நெய்யிலிட மேலாறுங்
காளகண்ட முட்டைகலி கை. (277)

பனசக்கோட்டை லேகியம்

சட்டகத்தை வச்சிரவே தண்டமாக் கும்பனசக்
கொட்டையைநெய் யிற்பொரித்துக் கொண்டதிலே—வட்டுகறி
நேர்கணைகோத் துண்புளியை நீக்குநெய்பா லாமறுபெண்
சூர்பிணி வியாதிநலி சூழ். (278)

பட்டையொரு நாலும் பலமோர் வகைக்காகி
யிட்டிடு மேரண்டத்தயிலத் தேற்றியே—யட்டு
நசியமிடப் பீநசம்போ நாட்டவலி நீங்குஞ்
சசியோம மஞ்சள் பிருந்தம். (279)

முடக்குவாதம்

தன்னரிசி நாலுஞ் சமமாக வெட்பாலைப்
பன்னரசத் தாலரைத்துப் பண்ணுருண்டை—தின்ன
முடமகலு நீருடனே மோருடன்போம் பித்தம்
வெடியரக்கு குங்குமப்பூ வேய். (280)

காய்கறியாய்ப் பூவின் கறியா யிலைக்கறியாய்
வாய்க்குமதன் புறணிவேர் வாய்க்குமே—நோய்க்கு
விவரமிகவாதலினால் மேதினிமேற் சொன்னேன்
தவசி மனிதருக்குத் தாய். (281)

மாருத வெய்ய வலுநோயினுக்கு வெண்ணெய்
நீருக மூலிகையாய் நேரிட்டு—வீறுகின்ற
வாசனையி லிந்த மகிதலத்தி லேயதிகந்
தூசனைகா விற்பொடித்த தூள். (282)

அக்குமணி பற்பம்

தேனிலுணப் பாண்டுவறுந் தீருமிள நீரிலுண
வூனில் விடக்கடிக ளுள்ளவெல்லாந்—தானறுமே
விக்கலெலு மிச்சிலுண வெப்பமறு நீரிலுண
அக்கு மணியடலை யால். (283)